# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**மாதாந்தப் பரீட்சை – 2022 (ஜூலை)**

| பெயர் / சுட்டெண் :- ..................... | தரம் :- 6 | நேரம் :- 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க :**
- **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

## பகுதி - I

01 உமக்கு வீடு தவிர்ந்த மிகவும் பரீட்சயமான சூழலாக விளங்குவது

(1) பாடசாலை (2) வைத்தியசாலை (3) வழிபாட்டுத்தலம் (4) நீதிமன்றம்

02 பாடசாலையில் மாணவர்கள் சேர்வு பற்றிய விபரங்களை பதியும் ஆவணம்

(1) சம்பவத் திரட்டுப் புத்தகம் (2) மாணவர் சேர்வு இடாப்பு

(3) பொருட் கணக்கெடுப்புப் பதிவேடு (4) மாணவர் வரவு இடாப்பு

03 பாடசாலையின் வரலாற்றுச் சம்பவங்களை அறிய உதவும் ஆவணம்

(1) சம்பவத் திரட்டுப் புத்தகம் (2) பொருட்பதிவேடு

(3) மாணவர் சேர்வு இடாப்பு (4) வசதிகள் சேவைகள் கட்டண கணக்கு

04 ஓர் பாடசாலையின் ஒழுங்கமைப்பு மாதிரி குறிப்பிடுவது

(1) பாடசாலைக் கட்டடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள முறையாகும்.

(2) பாடசாலையின் கணக்குகள் ஒழுங்கமைக்கப்பட்ட முறையாகும்.

(3) பாடசாலையின் கோவைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள முறையாகும்.

(4) பாடசாலையின் நிர்வாகம், அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பனவற்றைக் குறிப்பதாகும்.

05 பாடசாலையின் கல்வி மற்றும் பௌதீக வள விருத்திக்கு உதவுவது

(1) அதிபரின் கடமையாகும் (2) பெற்றோரின் கடமையாகும்

(3) ஆசிரியரின் கடமையாகும் (4) கல்விசாரா ஊழியர்களது கடமையாகும்

06 நீங்கள் மாணவர் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணம்

(1) சேர்விலக்கம் (2) பிறப்புச் சான்றிதழ்

(3) தேர்தல் இடாப்பு (4) சம்பவத் திரட்டுப் புத்தகம்

07 உங்களின் வயதைத் சரியாக உறுதிப்படுத்த உதவும் முறை

(1) தாயிடமிருந்து (2) தந்தையிடம் இருந்து

(3) பிறப்புச் சான்றிதழில் இருந்து (4) கணக்கிட்டுப் பார்த்து



kalvi.lk

08 1947இல் இலவசக்கல்வியை வழங்க சட்டம் கொண்டுவரப்படக் காரணமாக இருந்த கல்வி அமைச்சர்

(1) C.W.W.கன்னங்கரா (2) டி.பி.ஜாயா

(3) ரிச்சட் பத்திரன (4) அகிலவிராஜ் காரியவசம்

09 பேராசிரியர் சேனகபிபிலே எத்துறை சார்ந்த பேராசிரியராகக் கொள்ளப்படுகின்றார்

(1) கல்வித்துறை (2) மருத்துவத்துறை

(3) பொருளியல்துறை (4) பொறியியல்துறை

10 பாடசாலையில் மாணவர்களது வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்வதற்கு முன்மாதிரியாய் அமைவது

(1) பாடசாலையின் கொடி (2) பாடசாலையின் இலச்சினை

(3) பாடசாலையின் மகுடவாசகம் (4) பாடசாலைக்கீதம்

- **11 – 15 வரையான வினாக்களுக்கு சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவம் எழுதுக.**

11 பாடசாலையின் வரலாறு பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்குப் பயன்படும் எல்லாம் மூலாதாரங்கள் என அழைக்கப்படும். ( )

12 திட்டமிடல் என்பது ஏதாவது ஒரு விடயத்தில் உச்சப்பயனைப் பெறும் வகையில் அதனைப் பகுதியாக முறையாக குறித்த காலத்தில் செய்து முடிப்பதாகும். ( )

13. திட்டமிடலை மேற்கொள்ளும் மாணவன் அத்தியாவசியமான நடவடிக்கைகளைக் கைவிடுவான். ( )

14 பாடசாலையில் சட்டதிட்டங்கள் அவசியமாவதற்கான காரணங்களில் ஒன்று மாணவரின் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்காகும். ( )

15 பாடசாலையால் தொன்று தொட்டுப் பேணப்பட்டு வரும் பழக்க வழக்கங்களை ஏற்று நடத்துதலும் பின்பற்றுதலும் சம்பிரதாயத்தைப் பின்பற்றுதல் எனலாம். ( )

- **16 – 20 வரையான வினாக்களுக்கு Aப்பகுதியில் உள்ள விடயங்களை Bப்பகுதியுடன் இணைக்குக.**

16

| (A) | (B) |
|---|---|
| 1. வரலாற்று மூலாதாரம் | A. அதிபர் |
| 2. கல்விச் செயற்பாடுகளின் தலைவர் | B. கல்விசாரா ஊழியர் |
| 3. பாடசாலையைப் பாதுகாப்பதற்கு உதவுபவர் | C. ஞாபகார்த்தப் பலகைகள் |

(1) ABC (2) CBA (3) CAB (4) BCA

17

| (A) | (B) |
|---|---|
| 1. பணிக்கூற்று | A. பாடசாலைக் கலாசாரம் |
| 2. சம்பவத் திரட்டுப் புத்தகம் | B. பாடசாலையின் முக்கிய சம்பவங்களைப் பதிதல் |
| 3. பாடசாலைச் சீருடை | C. பாடசாலையால் உங்களுக்காக ஆற்றப்படும் பணி |

(1) ABC (2) CBA (3) BAC (4) ACB



kalvi.lk

18

| | (A) | (B) |
|---|---|---|
| | 1. பாடசாலை அபிவிருத்திச்சங்கம் | A. பௌதீகவள விருத்திக்கான உதவிகள் |
| | 2. பழைய மாணவர் சங்கம் | B. பாடசாலைக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்தல் |
| | 3. மக்கள் பிரதிநிதிகள் | C. பாடசாலையின் விசேட வைபவங்களுக்கான ஒத்துழைப்பு |

(1) CBA (2) BAC (3) BCA (4) ABC

19

| | (A) | (B) |
|---|---|---|
| | 1. பிள்ளைநேயப் பாடசாலை | A. தமது கருத்தை வெளிப்படுத்தல் |
| | 2. மாணவ உரிமை | B. சிறுவர் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது |
| | 3. திட்டமிடல் | C. நோக்கங்களை இலகுவாக அடைந்துகொள்ளல் |

(1) ABC (2) CBA (3) BAC (4) ACB

20

| | (A) | (B) |
|---|---|---|
| | 1. பேராசிரியர் சேனகபிபிலே | A. ரிச்மன்ட் கல்லூரி |
| | 2. C.W.W. கன்னங்கரா | B. “தடாபோய்” தங்கப் பதக்கம் |
| | 3. பலவீனம் | C. பிறருக்கு உதவ விரும்பாமை |

(1) BAC (2) ABC (3) CBA (4) ACB

(20 X 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

- **முதலாம்** வினாவுக்கும் ஏனைய **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

01 (I) உமது பாடசாலையின் வரலாறு பற்றி அறிய உதவும் மூலாதாரங்கள் **இரண்டு** தருக.

(II) பாடசாலை ஒழுங்கமைப்பில் அதிபருக்கு உதவுவதற்காக அங்கம் வகிக்கும் **இரு** அமைப்புக்களைத் தருக.

(III) உங்களிடம் காணப்படும் சிறந்த நற்பண்புகள் **இரண்டு** தருக.

(IV) தனிமனித திறமைகளை அதிகரித்துக்கொள்ள பயன்படும் நுட்பங்கள் **இரண்டு** தருக.

(V) பாடசாலைக் கலாசாரம் என்பதனுள் அடங்கும் விடயங்கள் **இரண்டை** எழுதுக.

(VI) பாடசாலைக் கீதம் இசைக்கப்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டு** தருக. (6 X 2 = 12 புள்ளிகள்)



kalvi.lk

02 (I) பாடசாலையின் வரலாறு என்பதால் கருதப்படுவது யாது? (3 புள்ளிகள்)

(II) பாடசாலை ஒழுங்கமைப்பு மாதிரியில் பங்குபற்றும் பல்வேறு நபர்களில் **நான்குபேரைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) பாடசாலை மாணவன் என்றவகையில் உமது கடமைக்கூறுகள் **ஐந்து** எழுதுக. (5 புள்ளிகள்)

03 (I) ''திட்டமிடல்'' என்றால் என்ன? (3 புள்ளிகள்)

(II) திட்டமிடப்படாத நிலையால் ஏற்படும் பிரச்சினைகள் **நான்கு** தருக. (4 புள்ளிகள்)

(III) பாடசாலை மாணவனுக்கான பொதுவான சட்டதிட்டங்கள் **ஐந்து** தருக. (5 புள்ளிகள்)

04 (I) பாடசாலை இலட்சினையில் பயன்படுத்தப்படும் விடயங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) பாடசாலை இலட்சினை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் **நான்கைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) மாணவரின் கற்றல் நடவடிக்கைக்காக அரசாங்கத்தால் மேலதிகமாக வழங்கப்படும் வசதிகள் **ஐந்தைக்** குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

05 (I) பாடசாலைச் சமூகம் ஏன் ஓர் பல்லினச் சமூகம் என அழைக்கப்படுகின்றது. (3 புள்ளிகள்)

(II) பாடசாலைச் சமூகத்தில் அங்கம் வகிக்கும் **நால்வரைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) பாடசாலை மூலம் சமூகத்துக்கு ஆற்றப்படும் சேவைகள் **ஐந்தைக்** குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

06 (I) பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் **மூவரைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) பிள்ளைநேயப் பாடசாலைச் சூழலின் பண்புகள் **நான்கைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) உமது பாடசாலையின் நோக்கக்கூற்று பணிக்கூற்றை எழுதுக. (5 புள்ளிகள்)



kalvi.lk

## தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

**WHATSAPP**

**075 287 1457**